வரையறுக்கப்பட்ட முகாமைத்துவ சேவைகள் றக்ஷண (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய அகல்விரிவான வருமானக்கூற்று, நிதிநிலைமைக் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று கணக்கீட்டுக் கொள்கைளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு நான் தெரிவிக்க வேண்டிய எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபையின் தீர்மானத்திற்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் இணங்க தயாரிக்கப்பட்டு சமர்பிப்பது பணிப்பாளர் சபையின் (‘‘சபை’’) பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன்

நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

-----------------------------------

### 2.1 அபிப்பிராயம்

------------------------------

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாட்டின் மீதான அறிக்கை**

2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் பிரிவு 163(2) தேவைப்பாட்டிற்கிணங்க எனது வெளிப்படுத்தல்கள் பின்வருமாறு:

அ. கணக்காய்வினுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை, நோக்கெல்லை மற்றும் வரையறையானது மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

ஆ. எனது அபிப்பிராயத்தில்;

- கம்பனியினால் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவுகள் பேணப்படுவதுடன் கணக்காய்வுக்குத் தேவையான எல்லாத்தகவல்களும் விளக்கங்களும் எனது பரீட்சிப்புக்களின் வெளிப்படுத்தல்களிலிருந்து பெற்றுக்கொண்டேன்.

- கம்பனியினுடைய நிதிக்கூற்றுக்களானது 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 151 இன் தேவைப்பாட்டிற்கிணங்க இணங்கியுள்ளது,

என்றும் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாத ஆவணரீதியான சான்றுகள்

கணக்காய்வுக்கான உறுதிப்படுத்தல் பின்வரும் தொடர்புடைய பகுதியில் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

- கம்பனிக்கு எதிராக ஏதாவதொரு வழக்கினாலான வழக்கறிஞரின் உறுதிப்படுத்தல் அல்லது கம்பனியினால் பூர்த்தி செய்யப்பட்ட ஏதாவதொரு வழக்கு.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

### 3.1.1 நிதிசார் விளைவுகளின் சுருக்கம்

கீழ்வரும் அட்டவணையானது தற்போதைய ஆண்டிற்கானதும், முன்னைய ஆண்டிற்கானதுமான நிதிப்பெறுபேற்றினது பல்வேறு நிலைகளினது சுருக்கத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

| | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு** | |
|---|---|---|
| | **2016** | **2015** |
| | **ரூபா.** | **ரூபா.** |
| முகாமைத்துவக் கட்டணம் | 345,013,433 | 323,109,376 |
| **வருமானம்** | **345,013,433** | **323,109,376** |
| நிர்வாகச் செலவினம் | 337,553,849 | 320,046,411 |
| மேந்தலைச் சேவைகள் | 1,881,718 | 290,194 |
| ஏனைய செலவுகள் | 4,445,360 | 704,046 |
| **மொத்தச் செலவுகள்** | **343,880,927** | **321,040,651** |
| **வரிக்கு முன் இலாபம்** | **1,132,506** | **2,068,725** |
| வருமான வரிச் செலவினம் | (1,132,506) | (2,068,725) |
| **வரிக்குப் பின் இலாபம்/நட்டம்** | - | - |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------------

### 4.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------

இந்தக் கம்பனி உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கமாக வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தின் சம்பளக் கொடுப்பனவினை இந்தக் கம்பனியினூடாக செலுத்துவதாக காணப்படுகின்றது. அத்துடன் இந்தக் கம்பனியினை தனியாக பேணுவதனால் ஏற்பட்ட மேலதிகச் செலுத்துகையான ரூபா 49,368,850 ஆனது 2016ல் உள்ளடக்கியுள்ளது. அந்தச் செலவுகளின் விபரங்கள் பின்வருமாறு.

| | **தொகை**<br>**ரூபா** |
|---|---:|
| பெறுமதி சேர் வரி | 41,060,292 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 6,716,949 |
| கணக்காய்வுக் கட்டணம் | 117,500 |
| வரி ஆலோசனைக் கட்டணம் | 204,032 |
| கம்பனி பதிவுக் கட்டணம் | 60,000 |
| வருமான வரி | 903,491 |
| செயலாளருக்குரிய கட்டணம் | 23,536 |
| ஈஎவ்சி இற்கான அங்கத்துவக் கட்டணம் | 283,050 |
| **மொத்தம்** | **49,368,850** |

### 4.2 ஏனைய நிறுவன வளங்களின் பயன்பாடு

-----------------------------------------------------------------------------

கம்பனியானது தற்போது இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினது உடமைகளையும் ஊழியர்களையும் தமது செயற்பாடுகளுக்கு பயன்படுத்துகின்றது. அத்துடன் இவை கம்பனிக்கான சேவையாக கருத்திற் கொள்ளப்படாததுடன் இதன் பெறுமதியானது அதன் கணக்குகளிலும் வெளிப்படுத்தப்படவில்லை.